**தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஏப்ரல் 26 இல் மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல்வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 262.10 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 251.39 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 10.71 மில்லியன் தொகை அல்லது தேறிய நிதியேற்பாடுகளில் 4.09 சதவீதமாக இருந்தது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 188.63 | 177.97 | 10.66 | 5.65 |
| மூலதனம் | 73.47 | 73.42 | 0.05 | 0.07 |
| மொத்தம் | **262.10** | **251.39** | **10.71** | **4.09** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 20 அமைச்சுக்கள் மற்றும் 11 திணைக்களங்களிடமிருந்து ரூபா 582.09 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 545.51 மில்லியன் கூட்டுமொத்தமான தொகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, சேமிப்புக்கள் ரூபா 36.58 மில்லியன் தொகையாக அல்லது பெறப்பட்ட மொத்த நிதியேற்பாடுகளில் 6.28 சதவீமாக இருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் 26701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18.07 | 16.94 | 8.57 | 10.25 | 50.00 | 42.75 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 6003/0000/00/0043/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மொத்த மீதி ரூபா 50.10 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்குட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகளை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணியிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| கட்லொக் புத்தகங்கள் | கச்சேரி கைநூல் 5:9 | பேணப்பட்டிருக்கவில்லை |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 482 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கொள்வனவு நேர அட்டவணை (பிரீஎஸ்) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பிரிவு | பேணப்பட்டிருக்கவில்லை |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1), 846(3) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரிப்பதில் வருடாந்த திருத்திய பாதீட்டு தொகைகள் கருத்திற்கொள்ளப்பட்டு காட்டப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் என்பவற்றின் மொத்தத் தொகையானது முறையே ரூபா 13.00 மில்லியன் மற்றும் ரூபா 3.00 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டிற்காக மாவட்டச் செயலகத்தால் ரூபா 1,019,696,189 மொத்தக் கட்டுநிதி பெறப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதிப் பதிவேடு மற்றும் உப கட்டுநிதிப் பதிவேடு என்பன கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் முறையாகவும் ஒழுங்காகவும் பேணப்பட்டிருக்கவில்லை. பெறப்பட்ட கட்டுநிதியின் மொத்தத் தொகை மற்றும் மாவட்டச் செயலகத்திற்கும் 06 பிரதேச செயலகங்களிற்குமிடையேயான கட்டுநிதியின் வினைத்திறனான கட்டுநிதி ஒதுக்கீடு என்பவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பிட முடியாதிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 50.10 மில்லியன் கூட்டுமொத்தமான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) ரூபா 21.64 மில்லியன் கூட்டுமொத்தமான 06 பிரதேச செயலகங்களின் வைப்பு மீதிகளின் வகைப்படுத்தல் விபரங்கள் கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) ரூபா 4,471,121 கூட்டுத்தொகையான 04 பிரதேச செயலகங்களின் பொது வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட 244 தனியாள் வைப்புக்களின் நோக்கம் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

26701 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கம் மற்றும் அங்கத்தவர் கடன் பதிவேடு (சீசீ – 10) என்பவற்றில் காட்டப்பட்ட தொகைக்கிடையே ரூபா 59,824 கூட்டுமொத்தமான இணக்கஞ்செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது வேறுபாடுகளை இணக்கஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களின் புத்தகங்களில் ரூபா 1,567,241 கூட்டுத்தொகையான தனியாள் கடன் மீதிகள் காட்டப்பட்டிருந்த போதிலும் கடந்த 08 ஆண்டுகளிற்கு மேலாக அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கின் இணக்கக் கூற்றில் இவை ஓய்வுபெற்ற, இடைநிறுத்தப்பட்ட, இறந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த 05 ஆண்டுகளிற்கு மேலாக பதவி வறிதாக்கப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் ஒழுக்காற்றுக்குட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 451,583 கூட்டுத்தொகையான முற்பணங்கள் மற்றும் கடன்களின் நிலுவை மீதியினை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

மாவட்டச் செயலகம் 2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்களின் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட ஜெனரேட்டரொன்று மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப்பெற்று கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாதிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 9.80 மில்லியன் கிரயமான புதிய ஜெனரேட்டரொன்று (502 கிலோவாற்ஸ்) 2015 திசெம்பர் 23 இல் கொள்வனவு செய்யப்பட்டு 2016 திசெம்பரில் மாவட்டச் செயலகத்தால் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த இரண்டு ஜெனரேட்டர்களை

கொண்டிருப்பதற்கான நோக்கம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட ஜெனரேட்டரின் கிரயம் மற்றும் இந்த இயந்திரங்களின் திறன் செயற்படுத்துநரின் விபரங்கள் என்பன கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்காததால் இந்த ஜெனரேட்டர்களின் கிரய நன்மைகள், ஆக்கபூர்வமான பயன்பாடு மற்றும் பராமரிப்பு என்பவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) கணக்குகளில் காட்டப்பட்ட 17 எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்களின் உரிமைத்துவ விபரம், உள்ளதன்மை, பெறுமதி மற்றும் ஆக்கபூர்வமான பயன்பாடு மற்றும் மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டமை என்பன கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) 2012 செப்தெம்பர் 03 இல் எவ்ஏஓ (ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு) அமைப்பால் மாவட்டச் செயலகத்திற்கு ஆறு எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்கள் நன்கொடையளிக்கப்பட்டிருந்த போதிலும் உரிமைத்துவ விபரம், பதிவு இலக்கங்கள், உள்ளதன்மை, பெறுமதி மற்றும் ஆக்கபூர்வமான பயன்பாடு என்பன கடந்த 04 ஆண்டுகளிற்கு மேலாக கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 3.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94(2) | 380,880 | 28 செலவின விடயங்களின் பொறுப்புக்களிற்கான சுயாதீன உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் மாவட்டச் செயலகத்தினதும் மூன்று பிரதேச செயலகங்களினதும் பதிவேடுகள் என்பவற்றில் பொறுப்புக்களில் காட்டப்பட்ட தொகைக்கிடையே ரூபா 116,782 கூட்டுத்தொகையான மொத்த வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 565(3) | | மீளாய்வாண்டிற்கான பொது வைப்புக் கணக்கின் சமப்படுத்தல் மாவட்டச் செயலகத்தினாலும் ஆறு பிரதேச செயலகங்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | | மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டு நன்கொடையளிக்கப்பட்ட இருபத்தாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் 23 மோட்டார் சைக்கிள்கள் மீளாய்வாண்டிற்கான களஞ்சிய மெய்மையாய்விற்காக |

நியமிக்கப்பட்ட சபையால் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (iv) நிதிப்பிரமாணம் 757 | மாவட்டச் செயலகத்தினாலும் ஆறு பிரதேச செயலகங்களினாலும் மீளாய்வாண்டிற்கான களஞ்சியப் பொருட்களின் வருடாந்த மெய்மையாய்வு அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை – 2006** | |
| 5.4.11 ஆம் வழிகாட்டி | செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் விபரம் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

### (அ) குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்காக செயற்திட்டங்கள் பயன்படுத்தப்படாமை

(i) ரூபா 7.86 மில்லியன் மொத்தக் கிரயத்தில் வெலிஓயா பிரதேச செயலாளரிற்கான விடுதிகள் (ஒற்றை மாடிக் கட்டிடம்) நிர்மாணிக்கப்பட்டு 135 எண்ணிக்கையான இருப்புப் பொருட்கள் மற்றும் பொருத்துக்களுடன் 2012 திசெம்பர் 14 இல் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய பிரதேச செயலாளரால் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் கடந்த 04 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ii) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து ரூபா 24.19 மில்லியன் மொத்தக் கிரயத்தில் மாவட்டச் செயலகத்தால் முல்லைத்தீவிலுள்ள செல்வபுரத்தில் பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களிற்கான பாதுகாப்பு நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டு 2014 திசெம்பர் 26 இல் மாவட்டச் செயலாளரிற்கு 481 இருப்புப் பொருட்கள் மற்றும் பொருத்துக்களுடன் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சாத்தியவள அறிக்கை, பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களின் விபரம் மற்றும் நிலையத்தினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை என்பன கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3.10 அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

விசேட செயற்திட்டங்களின் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதியிலிருந்து ரூபா 167,534 தொகையானது உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கடமையை மேற்கொண்டமைக்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் மூன்று உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2007 ஏப்ரல் 05 இன் 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம்

நியமனக் கடிதம் அல்லது உரிய அமைச்சின் செயலாளரிடமிருந்து விடுவிக்கப்பட்டமைக்கான கடிதம் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**3.11 முகாமைத்துவப் பலவீனங்கள்**

கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட முகாமைத்துவப் பலவீனங்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கொள்வனவுக் குழுவால் நியமிக்கப்பட்ட ஒப்பந்ததாரரால் புதிய கட்டிடத் தொகுதி கட்டம் - I நிர்மாணிக்கப்பட்டு 2014 யூலை 29 இல் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயம் அல்லது பெறுமதி கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கட்டிடத்தை கையேற்ற பின்னர் உடனேயே பல வெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து திருத்தங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தளத்திற்கு மாபிள் பதித்தல் வேலைகள் தவிர மேற்குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகள் இந்த புதிய கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் கிரயம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைக்கான காலப்போக்கு என்பவற்றை மதிப்பிடுவதற்கு உரிய கோவைகள் மற்றும் ஆவணம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**3.12 நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 24 இல் ரூபா 298.9 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதியிடப்பட்ட 35 விடயங்களின் இழப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்டச் செயலாளரிற்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடந்த 01 ஆண்டும் 10 மாதங்களிற்கும் மேலாக வரிசை அமைச்சின் செயலாளரிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் 28 இல் என்பிபிசீ 2161 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ள அலுவலக வாகனத்தின் விபத்தினால் ஏற்பட்ட ரூபா 227,926 நட்டப் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்காததுடன் கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக நிதிப்பிரமாணம் 104(2) இன் பிரகாரம் இந்த நட்டம் மீதான நடவடிக்கை அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.13 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முன்னைய ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மாவட்டச் செயலகத்துடன் தொடர்புடைய பந்திகளிற்கான தொடர்பு, பின்தொடர் நடவடிக்கை என்பன இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| 154(6) கணக்காய்வு அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்பின் கீழான விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 3.12 | பண்டாரவன்னியன் கிராமிய அபிவிருத்திச் சங்கத்துடன் கைசாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2013 யூலையிலிருந்து 2014 பெப்ரவரி வரை யுனிசெவ்வால் நிதியளிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்ட ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழான பகுதிகளிலுள்ள பொது மக்களிற்கான மலசலகூட வசதிகளை நிர்மாணித்தல் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 2.71 மில்லியன் கூட்டுத்தொகையான மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்வு புலனாய்வுகள் அறிக்கையிட்டிருந்தன. இது தொடர்பில் உடன்படிக்கையின் பிரதி, 01/2012 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சி ரூபா 10.57 மில்லியன் ஆன வேலைகளின் மொத்தக் கிரயத்தில் கையளிக்கப்பட்டமைக்கான காரணம் மற்றும் வேலைகளின் செயன்முன்னேற்றம், வங்கிக் கணக்குகளின் விபரம் மற்றும் காலரீதியான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு அறிக்கைகள் என்பன கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்காததுடன் கடந்த 04 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.14 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 19 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 02 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை | 345 | 210 | 135 |
| (iv) | ஆரம்ப நிலை | 46 | 42 | 04 |
| | **மொத்தம்** | **435** | **273** | **162** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 162 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.